ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருத்தேவனார் தொகை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருத்தேவனார் தொகை

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।

ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
    ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆
படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆

தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – போதலர்ந்த

‡ போதலர்ந்த பொழிற் சோலைப் ⋆
புறம் எங்கும் பொரு திரைகள் ⋆
தாதுதிர வந்தலைக்கும் ⋆
தட மண்ணித் தென் கரை மேல் ⋆
மாதவன் தான் உறையும் இடம் ⋆
வயல் நாங்கை ⋆
வரி வண்டு தேதென என்றிசை பாடும் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.1** ॥

யாவருமாய் யாவையுமாய் ⋆
எழில் வேதப் பொருள்களுமாய் ⋆
மூவருமாய் முதலாய ⋆
மூர்த்தி அமர்ந்துறையும் இடம் ⋆
மா வரும் திண் படை மன்னை ⋆
வென்றி கொள்வார் மன்னு நாங்கை ⋆

தேவரும் சென்றிறைஞ்சு பொழில் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.2** ॥

வா நாடும் மண் நாடும் ⋆
மற்றுள்ள பல் உயிரும் ⋆
தானாய எம் பெருமான் ⋆
தலைவன் அமர்ந்துறையும் இடம் ⋆
ஆனாத பெருஞ்செல்வத்து ⋆
அரு மறையோர் நாங்கை தன்னுள் ⋆
தேன் ஆரும் மலர் பொழில் சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.3** ॥

இந்திரனும் இமையவரும் ⋆
முனிவர்களும் எழில் அமைந்த ⋆
சந்த மலர்ச் சதுமுகனும் ⋆
கதிரவனும் சந்திரனும் ⋆
எந்தை ! எமக்கருள் என நின்று ⋆
அருளும் இடம் எழில் நாங்கை ⋆
சுந்தர நற் பொழில் புடை சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.4** ॥

அண்டமும் இவ்வலை கடலும் ⋆
அவனிகளும் குல வரையும் ⋆
உண்ட பிரான் உறையும் இடம் ⋆
ஒளி மணி சந்தகில் கனகம் ⋆
தெண் திரைகள் வரத் திரட்டும் ⋆
திகழ் மண்ணித் தென் கரை மேல் ⋆

திண் திறலார் பயில் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.5** ‖

ஞாலம் எல்லாம் அமுது செய்து ⋆
நான்மறையும் தொடராத ⋆
பாலகனாய் ஆலிலையில் ⋆
பள்ளி கொள்ளும் பரமன் இடம் ⋆
சாலி வளம் பெருகி வரும் ⋆
தட மண்ணித் தென் கரை மேல் ⋆
சேல் உகளும் வயல் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.6** ‖

ஓடாத ஆள் அரியின் ⋆
உரு ஆகி இரணியனை ⋆
வாடாத வள் உகிரால் ⋆
பிளந்தளைந்த மாலதிடம் ⋆
ஏடேறு பெருஞ்செல்வத்து ⋆
எழில் மறையோர் நாங்கை தன்னுள் ⋆
சேடேறு பொழில் தழுவு ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.7** ‖

வார் ஆரும் இளங்கொங்கை ⋆
மைதிலியை மணம் புணர்வான் ⋆
கார் ஆர் திண் சிலை இறுத்த ⋆
தனிக் காளை கருதும் இடம் ⋆
ஏர் ஆரும் பெருஞ்செல்வத்து ⋆
எழில் மறையோர் நாங்கை தன்னுள் ⋆

சீர் ஆரும் மலர் பொழில் சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.8** ॥

கும்ப மிகு மத யானை ⋆
பாகனொடும் குலைந்து வீழ ⋆
கொம்பதனைப் பறித்தெறிந்த ⋆
கூத்தன் அமர்ந்துறையும் இடம் ⋆
வம்பவிழும் செண்பகத்தின் ⋆
மணம் கமழும் நாங்கை தன்னுள் ⋆
செம் பொன் மதிள் பொழில் புடை சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.9** ॥

‡ கார் ஆர்ந்த திருமேனிக் ⋆
கண்ணன் அமர்ந்துறையும் இடம் ⋆
சீர் ஆர்ந்த பொழில் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகை மேல் ⋆
கூர் ஆர்ந்த வேற் கலியன் ⋆
கூறு தமிழ் பத்தும் வல்லார் ⋆
எர் ஆர்ந்த வைகுந்தத்து ⋆
இமையவரோடிருப்பாரே ॥ **4.1.10** ॥

திரு கடல்மகள் நாச்சியார் சமேத தெய்வநாயகன் திருவடிகளே சரணம்